# பண்பாட்டு நோக்கில் சிலப்பதிகாரம்

***முனைவர் க. பாலின் ப்ரீத்தா ஜெபசெல்வி***
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி
https://doi.org/10.5281/zenodo.15323837

***ஆய்வுச்சுருக்கம்***
*பண்பாட்டு நோக்கில் சிலப்பதிகாரம் எனும் தலைப்பில் சிலப்பதிகாரத்தில் உள்ள பண்பாட்டு நிகழ்வுகள் சித்தரிக்கப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம்: கதையும் கருத்தியலும் என்னும் நூலை மையமிட்டு இவ்வாய்வுக்கட்டுரை அமைந்துள்ளதால் தொடர்புடைய பிற நூல் சான்றுகள் குறைவாகவே உள்ளது.இந்நூலும் சிலம்பைக் கருத்தில் கொண்டு அமைந்ததால் இளங்கோவின் படைப்புத்திறனும், பண்பாட்டு நோக்கமும் ஒப்பு நோக்கப்படுகிறது.கட்டுரையின் முடிவில் தொகுப்புரையும், முடிவுரையும் அதன் பிறகு கட்டுரையில் கொடுக்கப்பட்டிருக்கும் சான்றுகளுக்கான அடிக்குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. கட்டுரையின் பக்க எண்ணிக்கையும் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.*

**முன்னுரை**

*இலக்கிய பண்புகள் அனைத்தும் ஒருங்கே பெற்ற பழமையான மிகச்சிறந்த காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். தமிழர் வாழ்வின் விழுமியங்களையும் முன்வினைப் பயனின் கொடூர போக்கினையும் சித்தரித்து காட்டுகின்றது இக்காப்பியம். மனித நிலையில் தலைமுறை தலைமுறையாக செயல்படும் நடத்தை முறைகளை பண்பாடாகும். இடத்திற்கேற்ப மாறும் தன்மை கொண்டது. பண்பாட்டில் சங்க காலம் காப்பிய காலம் போன்ற காலகட்டங்களை இக்காலகட்டத்தில் ஒப்பிடுகையில் பெருமளவு மாற்றம் பெற்றுள்ளன என்று கூறிக்கொள்ளலாம் ஒரு சமூகத்தின் பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள் சடங்குகள் கலைநிகழ்வுகள் தொழில் வணிகம் அரசியல் ச ார்ந்த வாழ்க்கை முறைகள் என அனைத்திலும் பண்பாடு எனும் போக்கு நிலை கொண்டுதான் இருக்கின்றது. இவை பொருள் சார்ந்த இனம் சார்ந்த சமூகம் சார்ந்து பல்வேறு நிலைகளில் மாறுபடுகின்றன.அந்தவகையில் சிலப்பதிகாரத்தில் பண்பாடு என்னென்ன கூறுகள் அமைந்துள்ளன என்றும் எங்ஙனம் அவை பிரிக்கப்பட்டு கையாளப்பட்டு வருகின்றன என்றும் இக்கட்டுரையின் வழி அறியலாம்.*

**பண்பாடு**

*பண்பாடு என்பது பண்படுத்துதல் என்னும் பொருளில் அமையும் அதாவது நன்கு உழுது வேலைபார்க்க நிலம் எப்படி நல்ல விளைச்சலை தருமோ அதுபோல ஒழுக்க நெறியில் மேம்பட்டு சிறந்த பண்போடு உருவாகும் மனிதனும் சமூகத்தில் சிறந்தவனாக பார்க்கப்படும் உயர்த்தப்படுவான். இதனை தட்சணாமூர்த்தி*

*பண்பாடு என்னும் சொல்லிலிருந்து அமைத்து கொள்ளப்பட்டது சொல்லாகும் பயிரிடப்படும் அதற்கு ஏற்றவாறு நன்கு செய்யப்பட்ட நிலம் நன்செய் நிலம் ஆகும் என்று சொல்லப்படும்.[1] என்று கூறுகின்றார். இத்தகைய பண்பானது பல்வேறு அங்கங்களை கூறுகளை மையமாகக்*

கொண்டு பிரிக்கப்பட்டுள்ளது. இதனைப் பற்றி அறிஞர்கள் பலரும் பலவாறு பிரித்துக் காட்டுகின்றனர். வட்டவடிவில் பாரதி அவர்கள் பண்பாட்டுக் கூறுகளை பொருள் சார் கூறுகள், அறிதல் சார் கூறுகள், நேரியியல் சார் கூறுகள் என மூன்று வகைகளாகப் பிரிக்கிறார்.

தனிநாயகம் அடிகளோ, பண்பாடு என்றால் ஓர் இனத்தாரின் கொள்கைகள் கோட்பாடுகள் நோக்கங்கள் இலட்சியங்கள் வாழ்க்கை முறைகள் களவொழுக்கம் கற்பொழுக்கம் அகத்திணை புறத்திணை மரபுகள் இலக்கிய மரபுகள் அரசியலமைப்புகள் ஆடை அணிகலன்கள் திருவிழாக்கள் உணவு பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் இவற்றையெல்லாம் குறிக்கும்.[2] என்று விளக்கம் தருகிறார். இப்படி பலரும் பல்வேறு கூறுகளின் அடிப்படையில் வரையறை செய்கின்றனர். இதில் துரைசீனிச்சாமி அவர்கள்

1. பொருளியல் பண்பாடு
2. இனவியல் பண்பாடு
3. சமூகவியல் பண்பாடு

என மூன்று நிலைகளில் விவரிக்கின்றார். அவரது கூறுகளின் வழி சிலம்பில் பண்பாடு ஆராயப்படுகின்றது.

## பொருளியல் பண்பாடு

சமூகத்தின் நடத்தை முறைமைக்கான பொருளியல் சார்ந்த மரபுகளை பண்பாடு என்கின்றனர் இது சமூகத்துக்கு சமூகம் வேறுபடலாம் இனத்தை சமூகம் உருவாக்கப் பெற்ற பின்பு இயற்கையானது என்ற கருத்து மேலோங்கி நின்றது நிலைகளில் தொழில் வணிகம் சார்ந்த சூழல்கள் பார்க்கப்படுகின்றது சிறுதொழில் கைத்தொழில் பற்றி சில குறிப்புகள் காணப்படுகின்றன அந்த வகையில் செய்யும் தொழில் செய்தல் போன்றவற்றால் நெய்தல் போன்ற தொழில் செய்யும் காருகர் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. அவை,

*பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்*
*கட்டு நுண்வினைக் காருக ரிருக்கையும்*

**(சிலம்பு.கா.5: 16-17)**

நுகர்ச்சிப் பொருளான சுண்ணம், சந்தனக் கலவை, தொய்யிற் குழம்பு, வாசனை பூக்களான கட்டுப்பூ தொடைப்பூ விடுபூ போன்றவைகளும், வரகு திணை சாமை நெல் துவரை பயிறு உளுந்து போன்ற தானியங்கள் விற்பனை செய்யும் மனிதர்கள் பற்றியும் சிலம்பு நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

*வண்ணமும் சுண்ணமும் தண்ணறுஞ் சாந்தமும்*
*பூவும் புகையும் மேவிய விரையும்*

**(சிலம்பு.கா.5: 13-14)**

என்ற வரிகளின் வழி வாசனைப் பொருள்கள் பற்றிய குறிப்பினை அறியலாம்.

இவை மட்டுமின்றி மீன், கயிறு, உப்பு, பிட்டு, அப்பம் போன்றவை விற்பனை செய்யும் கடைகள் பற்றியும், சிற்ப வேலை செய்பவரான மண்ணீட்டாளர்கள், முத்துமணி கோர்ப்பவரான திருமணி குயிற்றுநர், நாளிகை பார்த்துச் சொல்லும் நாழிகை கணக்கர், தோற்கருவி செய்பவரான குயிலுவர் போன்றோர் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.

*மீன் விலை பரதவர் வெள்ளுப்புப் பகருநர்*
*பாசவர் வாசவர் பல்நிண விலைஞரோடு*

**(சிலம்பு.கா.5: 25-26)**

*கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டாளரும்*

**(சிலம்பு.கா.5: 30)**

*திருமணிக் குயிற்றுநர் சிறந்த கொள்கையோடு*
*அணிவளை போழ்நர்* **(சிலம்பு.கா.5: 46-47)**

என உணவுப் பொருள் விற்பவர்கள் பற்றியும் அன்றாட பயன்பாட்டிற்கான தொழில் முறைகள் பற்றியும் விளக்கமாக கொடுக்கப்பட்டுள்ளது அறியலாம். அதுமட்டுமன்றி விற்பனைப் ஏற்ப தெருக்கள் அமைந்த விதத்தையும் சிலம்பு நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

*பகர்வனர் திரிதரு நகர வீதியும்*

**(சிலம்பு.கா.5: 15)**

*கோவியர் வீதியும் கொடித்தேர் வீதியும்*

**(சிலம்பு.கா.5: 40)**

*கூலங் குவித்த கூல வீதியும்*

**(சிலம்பு.கா.5: 23)**

**அணிவளை போழ்நர் அகன்பெரு வீதியும்**
**(சிலம்பு.கா.5: 47)**

என்றபடி அரச வீதி, கலைஞர்கள் வீதி, கூல வீதி, துணி கடை வீதி, அணிகலன் வீதி என தொழில் வாரியாக கடைத்தெருக்கள் அமைந்திருந்த விதத்தை சிலம்பு எடுத்துக் காட்டுவதன் மூலம் அக்கால பொருளியல் பண்பாட்டை அறிய வாய்ப்பாக உள்ளது எனலாம்.

### பொருளியல் பண்பாட்டில் சிக்கல்

பொருளியல் பண்பாட்டில் சில சிக்கல்கள் இருப்பதையும் துரைசீனிச்சாமி எடுத்துக் காட்டுகின்றார்.

நகரத்தில் கணிகையர்க்கெனத் தனித்தெரு இருப்பதைக் காண்கின்றோம். காம நுகர்ச்சிக்கென பெண்கள் இருந்தமையை அறிகின்றோம். இவர்கள் விலைமகளிர் ஆவர். மாதவியும் 1008 கோவலனிடம் கொடுக்கப்பட்டவளே.தினமும் 1008 கழஞ்சு பெரும் கணிகையர் புகாரில் உண்டு என்பதனை மதுரையிலும் இளங்கோ காட்டுகின்றார். விலைமகளிருடன் காமக் களியாட்டில் ஈடுபடும் சமுகப் பின்னணியை புகார், மதுரை ஆகிய இரண்டு நகரங்களின் சித்திரத்தினூடாக இளங்கோ காட்டுகின்றார் 3 அக்காலத்தில் பொருள் ஈட்டும் முயற்சியில் விலைமகளின் பயன்பாடும் ஒன்றாக இருந்துள்ளது இதனால் நகர வாழ்க்கையில் வசதிபடைத்த ஆண்களின் நுகர்வுப் பொருளாக விலைமகளிர் இருந்திருக்கின்றனர். இதில் கோவலனும் விதிவிலக்கல்ல.

**நகை யாடய்த்து நன்மொழி திளைத்துக்**
**குரல் வாய்ப்பாணரொடும் நகரப் பரத்தரோடும்**
**திரிதரு மரபின் கோவலன் போல**
**இளிவாய் வண்டினொடு இன்னிள வேனிலொடு**
**மலயமா ருதம் திரிதரு மறுகில்**
**(சிலம்பு.கா.5: 199-203)**

இப்படி கோவலனின் வாழ்க்கைச் சிக்கலுக்கு விலைமகளின் பங்கு காரணமாக இருந்துள்ளதை துரைசீனிச்சாமி சுட்டிக் காட்டுகின்றார்.

அரசு குடும்பம் வணிகம் தொழில் சூழல் நகரம் ஆகியன நன்கு நடுநிலை பெற்ற காலம் சங்க காலத்தில் இறுதிப்பகுதி இக்காலத்தின் பண்பாட்டு சிற்களி சிலப்பதிகாரத்தின் பொருண்மைக்கான மூலம் எனலாம்.[4] இன்றைய பண்பாட்டு சிக்கலுக்கு மூலமாக சிலம்பு இருந்துள்ளதை துரை சீனிச்சாமி விமர்சிக்கிறார்.

### இனவியல் பண்பாடு

தமிழரின் வாழ்வியலில் விவரிக்க முடியாத ஒன்றாக இருப்பவை கலை உணர்வு நம்பிக்கைகள் சடங்குகள் வழிபாடுகள் போன்றவைகளாகும் இவற்றுள் நடத்தை கூறுகளாக பதிவு செய்கின்றான் காவியக் கவிஞன் இளங்கோவடிகள்.

### நம்பிக்கைகளும் சடங்குகளும்

இனவியல் இன் அடையாள கூறுகளில் நம்பிக்கையும் சடங்குகளும் மிக முக்கியமானதாக பார்க்கப்படுகின்றது இது போல் ஆதிகாலம் தொட்டு காலம் காலமாக பின்பற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது அந்த வகையில் தெய்வம் தோன்றி பேசுதல் நாழிகை பார்த்தல் சாபமிடுதல் முற்பிறப்பு வினை அசரீரி கேட்டல், கனவு பலித்தல் வழிபாடு செய்தல் பேய் பற்றிய நம்பிக்கைகள் என அனைத்தையும் இந்நிலையில் கொள்ளலாம்.

### கனவு பலித்தல்

கனவுகள் பற்றி பலரும் பல்வேறு விதமாக விளக்குகின்றன விருப்பத்தின் விளைவுதான் கனவு என்கின்றார் சிக்மண்ட் ப்ராய்டு. சில ஆழமன ஒட்டம் புலன் உணர்வுகள் ஆழ்ந்த சிந்தனை உணர்வுகள் ஆழமான யோசனை எண்ணங்கள் என பல்வேறு விதத்தில் கனவை விரிந்துரைக்கின்றனர். ச.வே.சுப்பிரமணியன் அவர்களோ, சங்க இலக்கியத்தில் முறையாகவும் விரைவாகவும் நிமித்தமாகவும் கனவுகள் வருவதை எடுத்துக்காட்டியுள்ளார்[5]

இதனடிப்படையில் சிலம்பில் கனவுகள் அமைந்த விதத்தை அழகு கிருஷ்ணன் அவர்கள், சிலப்பதிகாரத்தை பொருத்தமட்டில் கண்ணகியின் கனவு பின்னால் வரும் நிகழ்வுகளை முன்னறிவிக்கும் ஒரு கருவியாகவும் கோவலன் பாண்டிமா தேவி ஆகியோரின் கனவுகள் பின்னால் வரும் நிகழ்ச்சிகளை முன்னறிவிப்பும் கருவியாக மட்டுமின்றி சகுனமாக அமைவதை பார்கிறோம்[6] என்கிறார்.

விஞ்ஞானமும் கனவானது ஆழமான ஓட்டங்கள் எண்ணங்கள் மட்டும் என்று நான் நினைக்காத ஒன்றாகவும் பின்னர் நடக்கவிருக்கும் விடயங்களை முன்னர் அறிவிக்கும்போது சகுனமாகவும் அமைகிறது.

**சாபமிடுதல்**

மக்களது நம்பிக்கைகளில் ஒன்று சாபமிடுதல். இதுவும் ஒரு சில நேரங்களில் ஒரு சில மனிதர்களால் படித்தல் ஆகிவிடுகிறது ஆகவே பெரியவர்கள் கண்டிக்கும் போது யாருடைய சாபத்திற்கும் ஆளாகி விடக்கூடாது என்று சொல்கிறது வழக்கமான ஒன்றாகும்.

அந்த வகையில் சிலப்பதிகாரத்தில் மதுரையை நோக்கி செல்லும் கோவலன் கண்ணகியைப் பார்த்து வம்பப் பரத்தையர்கள், உடன் பிறந்தவர்கள் போல் இருக்கின்றனர் என்று கேலியாகக் கூறிவிடுவார் உடனே அருகில் இருந்த கவுந்தியடிகள் அவர்களுக்கு,

**முள்ளுடை காட்டின் முது நரி யாகென**

**( சிலம்பு.கா.10: 232-233)**

சாபம் இட்டார். இதில் ஏன் நரியாக மாறும்படி சாபமிட வேண்டும்? பாம்பாகவும் குழுவாகவோ மாறும்படி சமைக்கக் கூடாது என்று சிந்திக்கும் வேளையில், ஆப்பிரிக்காவில் வாழும் ஒரு பழங்குடி மக்களிடையே இருக்கும் நம்பிக்கை நினைவுக்கு வருகிறது அவர்கள் கெட்ட மனிதனின் உயிர் நரியாக மாறுவதாகக் கருதுகின்றனர். இதை அறிஞர் இ.பி.டெய்லர் எடுத்துக் காட்டுகின்றார்[7] என்று டெய்லரின் கருத்துக்களை எடுத்துக்காட்டி சாபத்திற்கு பொ.அழகு கிருஷ்ணன் விளக்கம் தருகின்றார்.

**சடங்குகள்**

ஆட்கள்மூலமாக தெய்வம் தோன்றி பேசும் மரபு தமிழரிடையே இருந்து வந்துள்ளதை சிலம்பு நமக்கு விளக்குகின்றது.

**குரல்தலைக் கூந்தல் குலைந்து பின்விழத்**
**துடித்தனள் புருவம் துவர் இதழ்ச் செவ்வாய்**
**..**
**தெய்வமுற்று எழுந்த தேவேந்திகை தான்**

**( சிலம்பு.கா.30: 38-45)**

கண்ணகியின் புகழை, தெய்வமேறிய சாலினி விளக்கிக் கூறும் விதம் கண்ணகியின் சிறப்பை உச்சப்படுத்துகின்றது இதுபோல் பல கதைமாந்தர்கள் தெய்வமேறிய நிலையில் பேசுவதும் அவர்களுக்கு தெய்வத்தைப் போல் அலங்கரித்து வழிபாடு செய்வது மரபாக இருந்து வந்துள்ளது என்பதை சிலம்பின் வழி அறியலாம். இதனை, தெய்வமாக தெய்வ மரபினரே தோன்றிப் பேசுவார் என்ற நம்பிக்கையின் அடிப்படை கொண்டவையே இதனை இளங்கோ உத்தியாக பயன்படுத்தி உள்ளார் 8 என்று இளங்கோவின் ஊத்தி நடையை துரை சீனிச்சாமி எடுத்துக் காட்டுகின்றார்.

**ஆரியர் மரபு**

தமிழர் மரபு சார்ந்த விடயங்களை விளக்கும் இளங்கோ ஆதரவினையும் இணைத்து காட்டுகின்றார் இதனை, தீவலம் வருதல் மற்றும் அருந்ததி அன்னாள் வடமீனின் திறம் போன்ற அறிமுகங்கள் மூலம் ஆரிய மரபுகள் இணைக்கப்படுகின்றன. திருமணச் சடங்கில் மகளிர் பாடிக்கூடிவரல் தமிழர் ம்ரபே. இந்திரன், ஊர்வசி போன்ற ஆரியர்களின் புராணக் கடவுளர்களின் இணைப்புடன் தோன்றும் சடங்குகள் யாவும் பண்பாட்டுக் கலப்பைக்காட்டுவனவே. எனவே இது

இளங்கோவின் விருப்பம் என்பதில் சந்தேகமில்லை.[9] என்று திருமணச் சடங்கில் ஆரிய மரபின் தாக்கத்தையும் இளங்கோவின் ஆரிய நாட்டத்தையும் துரை சீனிச்சாமி எடுத்துக் காட்டுகின்றார். மேலும் இவர் இதனை நாட்டார் பண்பாட்டுக்கூறுகள் என்றும் விளக்கமளிக்கிறார். இதில் ஆரிய மரபு கலந்திருந்தாலும் தமிழரின் பண்பாட்டு அடையாளத்தை தனித்துவப்படுத்துவது கூத்து இசை என்னும் நாட்டார் கலை மரபுகளே என்றும் அவர் விளக்குகின்றார்.

**சமூகவியல் பண்பாடு - (மதிப்பு நிலை)**

பண்பாட்டு அமைப்பில் மிக முக்கியமான ஒன்று மதிப்பாகும். தொழிலையோ நம்பிக்கை சார்ந்த சடங்குகளையோ காட்டுவதோடு மற்றும் பண்பாடு முடிந்துவிடுவதில்லை. மனித நடத்தை தீர்மானிக்கும் மிக முக்கியமான கூறுகளில் மதிப்பு இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது.

இதனை, பண்பாட்டு நடத்தைக்கான ஆழமான காரணியாக நங்கூரம் போல உள்ளாற்றல்லாக இயக்குவன மதிப்புகளே எனலாம். மனித நடத்தையினுள் நனவிலியாகவும் செயல்படுவது இது. ஒரு சமூக அமைப்பு அதற்கேற்ற சமூக நிறுவனங்கள் இவற்றை தீர்மானிக்கும் பொருளாதார-அரசியல்- அதிகார அமைப்பு இவற்றிற்கு ஏற்பவே மதிப்புகள் அமையும்.[10] என மதிப்புகளின் பயன்பாட்டையும் அமையும் விதத்தையும் துரைசீனிச்சாமி எடுத்துக் காட்டுகின்றார். வேளாண் தொழிலில் ஈடுபட்டு வந்த சமூகத்திலேயே நாகரீகம் வளரத் தொடங்கியது அவர்களுக்குள் பிரிவு ஏற்பட்டது இது சமூக நடத்தை ஆக உருவெடுத்தது ஆரம்ப காலத்தில் சமூகத்தின் தலைவன் என்ற வேறுபாடுகள் இல்லாது அனைவரும் சமநிலையில் இருந்தனர் சங்ககால இறுதியில் அந்நிலை மாறி அரசு அமைப்புகள் தோன்றம் பெற்றன. இதனால் அவர்களது பண்பாடு மாற்றம் பெற்றது. ஆண் பெண் எனப் பால் வேறுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் தோன்றலாயின.

பாலுறவுப் பங்கு நிலை சமத்துவமின்னையால் நெருக்கடிக்கு உள்ளாவது குடும்பமே. இந்த நெருக்கடியில் மனிதர்களுக்குள்ளே இயற்கையாக உள்ள உணர்வு எழுச்சிகளும் படிநிலை வேறுபாடு சார்ந்த உறவு நிலைகளும் மோதுவதும் துயரமான விளைவுகள் ஏற்படுத்துவதும் தவிர்க்க இயலாததே. சங்க கால இறுதியில் நிலைபெற்ற இந்தப் புதிய சமத்துவமற்ற சமூகப் பண்பாட்டின் பின்னணியில் தோன்றிய மதிப்புகள் சார்ந்த சிக்கல்களே சிலப்பதிகாரத்தில் பதிவு பெற்றுள்ளன.[11] என்று சமூக பண்பாட்டின் அடிப்படையாக அமைகின்ற பாலுறவு சார்ந்த சமத்துவமின்மையும், குடும்பச்சிக்கலையும் காரணம்காட்டி மேலும் இது போன்ற மதிப்புகள் சார்ந்த சிக்கல்கள் சிலம்பில் இடம் பெறுவதையும் துரை சீனிச்சாமி சுட்டிக் காட்டுகின்றார்.

கோவலன் கண்ணகி மாதவி என்ற மூவருக்குமான நடைமுறையில் கோவலனின் கட்டுப்பாட்டு நுகர்வின் குறியாக கண்ணகி அமைகின்றாள் ஆனால் மாதவியோ கட்டற்ற நிலையில் இருப்பது இயற்கை போக்கின் தன்மையாக உணரப்படுகிறது. இதனால் கோவலனும் இயற்கை போக்கின் வழியான மாதவியோடு கலந்து விடுகின்றான் பாலின சமத்துவமின்மையும் வேட்கையும் இன்று அவனிடமிருந்து திரிந்து கண்ணகியிடம் செல்ல வழி வகுக்கிறது.

> ***கானல் வரி யான் பாட தான் ஒன்றின் மேல் மனம் வைத்து***
> ***மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள் பாடினாள் என***
> ***யாழிசை மேல் வைத்து ஊழ்வினை வந்து உருத்தது ஆகலின்***
> ***உவவுஉற்ற திங்கள்முகத்தாளைக் கவவுக்கை ஞெகிழ்ந்தனனாய்ப்***
> ***பொழுதுஈங்குக் கழிந்தது ஆகலின் எழுதும்என்று உடன்எழாது***
> ***ஏவலாளர் உடஞ்சூழக் கோவலந்தான் போனபின்னர்***
> ***(சிலம்பு.கா.7: 52-58)***

*மேற்கண்ட பாடலில் ஊழ்வினை காரணமாக வந்த பிரிவாக கூறினாலும் ஒருவகையில் கோவலனுக்கு அவள் குலம் மீதான மதிப்பு முரண் எனவும் கொள்ளலாம். மேலும் வரதராசனார் கோவலன் இந்த அன்பை, கோவலன் மாதவியை நாடி வாழ்வதற்கு காரணமாக இருந்தது கலையே ஆகும். என்று மிக எளிமையாக கூறி விட்டுச் செல்கின்றார்.*

*இதிலும் நாம் பார்க்க வேண்டியது சமூக பண்பாட்டு மதிப்பு முரண் தான். இப்படி உறவுகளின் மீதான, குடும்பத்தின் மீதான அக்கறையற்ற, மதிப்பற்ற இந்நிலையை, குடும்பம் நிலைபெற்று அகத்திணையியல் பண்பாட்டுமதிப்பின்குறியீடாகிசமூகநடப்பாக மாறிவிட்ட பின்னணியில் அதன் சூழமைவில் உருவான குடும்பச் சிதைவு அல்லது சமூக முரண்களே சமூகவியல் பண்பாட்டுச் சிக்கல்களாக இடம்பெற்றுள்ளன.[13] என்று சிலம்பின் பல சிக்கல்களுக்கு காரணியாக மதிப்பு என்ற ஒன்றை துரை சீனிச்சாமி அடையாளப்படுத்துகிறார்.*

## தொகுப்புரை

1. *சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள நம்பிக்கைகள் பற்றி விளக்கப்பட்டுள்ளது.*
2. *சடங்குகளும், வழிபாடுகளும் அது தொடர்பான நம்பிக்கைகளும் கூறப்பட்டுள்ளது.*
3. *இனவியல் பண்பாட்டின் வழி கலை மரபுகளும் விளக்கப்பட்டுள்ளது.*
4. *பொருள் சார்ந்த தொழில்கள் அவற்றின் வகைகள் விளக்கம் கூறப்பெறுகிறது.*
5. *தொழில் செய்யும் வீதிகள் பற்றி சிலம்பு குறிப்பிடும் செய்திகள் ஆராயப்படுகிறது.*
6. *மூகவியல் பண்பாட்டின் வழி மதிப்பு முரண் மற்றும் குடும்பச்சிக்கல்கள் விளக்கப்பட்டுள்ளது.*

## முடிவுரை

*சிலப்பதிகாரத்தில் பண்பாட்டுச் சூழலை பலரும் பலவிதமாக ஆராய, பொருளியல் பண்பாடு, இனவியல் பண்பாடு, சமூகவியல் பண்பாடு என மூன்று நிலைகளில் பிரித்து ஆராய்ந்துள்ள துரைசாமியின் பொருண்மை தனித்துவமானதாகும். இதில் உட்கூறுகளாக நம்பிக்கை சடங்குகள் தொழில், குடும்பம் என அனைத்து காரணிகளையும் மையமிட்டு ஆராய்ந்துள்ளார். இவ்விதம் இளங்கோவடிகளின் மனநிலையையும் பண்பாட்டின் மீதான நுட்பத்தினையும் அறிய வல்லதாக அமைகிறது எனலாம்.*

## சான்றெண் விளக்கம்


1. *தமிழர் நாகரிகமும் பண்பாடும்., அ.தட்சணாமூர்த்தி , ப.4, மு.ப.2019, ஐந்திணை பதிப்பகம், சென்னை.*
2. *தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும், தனிநாயகம் அடிகள், ப.18. மு.ப. 1980, தந்தை செல்வா அறங்காவற்குழு யாழ்ப்பாணம்.*
3. *சிலப்பதிகாரம் : கதையும் கருத்தியலும்., துரை சீனிச்சாமி, ப.42, மு.ப. 2013, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.*
4. *மேலது, ப.43.*
5. *சிலம்பின் சில பரல்கள்., ச.வே சுப்பிரமணியன், பக்.70-71, மு.ப. 1972, ஜெயக்குமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில்.*
6. *சிலப்பதிகாரம் காட்டும் பண்பாடும் சமுதாய வரலாறும்., பொ.அழகு கிருஷ்ணன், ப.227, மு.ப. 1988, ஐந்திணை பதிப்பகம், சென்னை.*
7. *மேலது, ப.220.*
8. *சிலப்பதிகாரம் : கதையும் கருத்தியலும்., துரை சீனிச்சாமி, பக். 44-45, மு.ப. 2013, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.*
9. *மேலது, ப.45*
10. *மேலது, ப.47*
11. *மேலது, ப.49*
12. *மாதவி., மு.வரதராசன், ப.26, மு.ப.1963, பாரிநிலையம், சென்னை.*
13. *சிலப்பதிகாரம்: கதையும் கருத்தியலும்., துரை சீனிச்சாமி, ப.51, மு.ப. 2013, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.*